செய்தி வெளியீடு எண் :038 நாள் : 06.01.2023

**<u>செய்தி வெளியீடு</u>**

**சென்னையில் இன்று (06.01.2023) நடைபெற்ற உலக தமிழ் வம்சவாளி 9–வது மாநாட்டில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் அவர்கள் ஆற்றிய உரை.**

-------

சென்னையில் இன்று நடைபெற்ற உலக தமிழ் வம்சவாளி 9–வது மாநாட்டில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆற்றிய உரை–

உலகத் தமிழர்களையும், உலக வர்த்தகர்களையும் ஒன்றிணைக்கும் உலக தமிழ் வம்சவாளி 9–வது மாநாட்டில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியில், சாதனை தமிழன் விருது, தமிழ் நிறுவனர் விருது, நல்லாசான் விருது பெற்றவர்களுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

60–க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலத்திலிருந்து இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள தமிழ் சான்றோர்கள், தமிழ் வர்த்தகர்கள், தொழில் முனைவோர்கள், தொழில் கூட்டமைப்பினர் அனைவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற தமிழர்களின் பொன்மொழிக்கு ஏற்ப, உலகத் தமிழ் வணிகர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ் சமுதாயம் மேம்படவும் தமிழர்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையவும் வழி காணப்பட்டுள்ளது. வணிகம் மட்டுமல்லாமல், உலகத் தமிழர்கள் உள்ளம் எல்லாம் மகிழுமாறும், தமிழ் மொழியை, நாகரிகத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கத்தோடு, இம்மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது சிறப்பான ஒன்றாகும். இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் திரு.செல்வகுமார் அவர்களுக்கு என் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதுடன், பெரும் தொழிற்சாலைகளுக்கு துணையாக இருந்து நாட்டின் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்கும், ஏற்றுமதிக்கும் பெரும் துணை புரிந்து வருகிறது. மேலும், நமது நாட்டில் வேளாண் துறைக்கு அடுத்தப்படியாக அதிக வேலைவாய்ப்புகளை அளிக்கும் துறையாக MSME துறை விளங்குகிறது.

பணமதிப்பிழப்பு, GST, கொரோனா ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டு துவண்டு இருந்த MSME துறையை தன் சீரிய திட்டங்களால் தூக்கி நிறுத்திய பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களேயே சாரும். இந்திய அளவில் தொழில் துவங்க உகந்த மாநிலங்களின் பட்டியலில் 14–வது இடத்திலிருந்த தமிழ்நாடு இன்று 3–வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. Start–up நிறுவனங்கள் தர வரிசை பட்டியலில் 5–வது நிலையிலிருந்து தமிழகம் இன்று 3–ம் நிலைக்கு முன்னேறியுள்ளது.

தமிழகத்தில், 7 லட்சத்து 7 ஆயிரம் 681 பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்கள் இயங்குகின்றன. இதன் மூலம், 64 லட்சத்து 48 ஆரியம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு

அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் 8 ஆயிரம் வகையான பொருட்களை உற்பத்தி செய்து MSME துறையில் இந்திய அளவில் தமிழகம் 3-ம் இடத்தில் உள்ளது.

தமிழக அரசு MSME தொழில்களுக்கு பல புதிய திட்டங்களை ஆட்சி பொறுப்பேற்றது முதல், தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கான உரிமங்களை விரைந்து பெற கடந்த ஆண்டு Single Window Portal 2.ஓ திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் 40 அரசு துறைகள் வழங்கும் 142 வகையான சேவைகளை இணைய வழியில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணைய தளம் மூலமாக 14,651 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 12,900 தொழில்முனைவோருக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு, குறு – நடுத்தர தொழில்கள், வியாபார நிறுவனங்களின் வளர்ச்சிக்காக , தமிழக அரசின் MSME துறையின் மூலம் NEEDS – UYEGP – PMEGP ஆகிய 3 வகையான மானியத்துடன் கூடிய சுய தொழில் திட்டங்களை செயல்படுத்தப்படுகிறது.இந்த 3 வகையான திட்டங்களின் கீழ், ஆட்சி பொறுப்பேற்ற குறுகிய காலத்தில், ரூ.586 கோடி மானியத்துடன், ரூ. 2 ஆயிரத்து 343 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு, 16,746 படித்த இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டு உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு, தேவையான கடன் உத்தரவாதத்தினை தமிழக அரசே வழங்கும் வகையில், இந்தியாவிலேயே முதல் முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ரூ. 100 கோடி நிதியில் *"தமிழ்நாடு கடன் உத்திரவாத திட்டம்"* துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ரூ. 40 லட்சத்திற்கு குறைவான வங்கிக்கடனுக்கு 90% உத்திரவாதமும், ரூ. 2 கோடி வரையிலான கடன்களுக்கு 80 சதவீதம் உத்திரவாத்தினையும் தமிழக அரசு வழங்கும். இந்தியாவிலேயே 90% வரை கடன் உத்திரவாதம் வழங்க உள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

MSME நிறுவனங்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்த பொருட்கள் மற்றும் வழங்கிய சேவைகளுக்கான விற்பனை பட்டியல்களை – Sales Bills வங்கிகளில் பில் டிஸ்கவுன்டிங் (Bill Discounting) முறையில் கடன் பெறுகின்றனர். இதற்கு, அதிக வட்டியும்–கூடுதல் உத்தரவாதமும் MSME நிறுவனங்கள் அளிக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் ஏற்படும் மூலதன நிதி சிக்கலை தீர்த்திடும் விதமாக தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் – TN–TReDS மாண்புமிகு முதல்வர் அவர்களால் அண்மையில் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் MSME நிறுவனங்களின் Sales – Bills மீது வங்கிகள் அளிக்கும் கடனுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணம் வழங்கவில்லை என்றால் தமிழ்நாடு தாய்கோ வங்கி ஆட்டோ டெபிட் முறையில் கடனை செலுத்தி விடும். இதனால், வங்கிகள் போட்டிப்போட்டுக் கொண்டு குறைந்த வட்டியில் MSME நிறுவனங்களுக்கு கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் துவக்கப்பட்ட குறுகிய காலத்தில் இந்த தளத்தின் கீழ் 83 மாநில பொதுத்துறை நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் தொழில் பாதிக்கப்பட்டு, நலிவுற்ற MSME நிறுவனங்களை மீட்டெடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள், ரூ. 50 கோடி நிதி ஒதுக்கி COVID CARE திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், கோவிட் பெருந்தொற்றால் தொழில் பாதிக்கப்பட்ட

தொழில் முனைவோர்கள் – அவர்களது வாரிசுகள் தொழிலை மீண்டும் அமைக்கவும், புதிய தொழில் தொடங்கவும், ரூ. 25 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் உதவியும், பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளான நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், தொழிலை நவீனமய மாக்கவும் முதலீட்டு மானியத் திட்டத்தில் 25 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும்.

தமிழகத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, அங்குள்ள சந்தை வாய்ப்புகளை அறிந்து கொள்ள, தமிழ்நாட்டில் கரூர், திருப்பூர், மதுரை, ஆம்பூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், ஓசூர் ஆகிய 10 இடங்களில் ஏற்றுமதி மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், வர்த்தக வாய்ப்புகளை அதிகரிக்க, தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வர்த்தக ஊக்குவிப்பு மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த அக்டோபர் மாதம், தமிழக தொழில் கூட்டமைப்பு சங்க பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் செக் குடியரசு நாட்டிற்கு ஏரோ–ஸ்பேஸ் தொழில்நுட்பம் குறித்த அறிய சென்று இருந்தோம். அங்கு சிறிய விமானங்கள் முதல் பெரிய விமானங்கள் வரை தயாரிக்கும் தொழிற்சாலையை நேரில் பார்வையிட்டோம். அதற்கு தேவையான உதிரி பாகங்களை தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசித்தோம். மேலும், இம்மாத இறுதியில் பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்பில் முன்னோடி நாடான இஸ்ரேல் நாட்டிற்கு செல்ல உள்ளோம். இவ்வாறு, தமிழகத்தின் MSME நிறுவனங்களுக்கான வாய்ப்புகளை தேடி தர கழக அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே, மாணவர்களை, புதிய கண்டுபிடிப்பாளர்களாக தொழில்முனைவோராக உருவாக்கும் வகையில், தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 30 ஆயிரத்து 794 இளைஞர்களுக்கும், ஊரக வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம், தாட்கோ போன்ற அரசு துறைகளுடன் இணைந்து 7 ஆயிரத்து 259 இளைஞர்களுக்கும், புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 21 ஆயிரம் மாணவர்களுக்கும், 97 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 68 ஆயிரம் மாணவர்களுக்கு என 3 லட்சத்து 27 ஆயிரம் இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி – வடிவமைப்பு தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்த புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் மூலம் ரூ. 2 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த நிதியாண்டு 2021–22 –ல் 92 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ. 4 கோடியே 46 லட்சம் நிதி உதவியும், நடப்பு ஆண்டு 2022–23–ல் 74 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ. 3 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுமை நிறைந்த தொழிலில் ஈடுபடுபவர்கள், தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள், புதிய தொழில் முனைவோர்கள்ஆகியோரை ஊக்கப்படுத்துவதற்கு, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் மூலம், ஆதார நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான புத்தொழில் நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 2021–22 –ல், 50 புத்தொழில் நிறுவனங்களுக்கு முதல் தவணையாக ரூ.2 கோடியே 50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2–வது

தவணை விரைவில் வழங்கப்பட உள்ளது. நடப்பு ஆண்டு, 2022-23-ல் 100 புத்தொழில்களுக்கு தலா ரூ.10 லட்சம் மானியமாக மொத்தம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இதில், பசுமை தொழில்நுட்பம், பெண்களால் நடத்தப்படும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், ஊரக வாழ்வாதார மேம்பாடு ஆகிய தொழில்களுக்கு மானியத் தொகை ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.15 லட்சமாக உயர்த்தி, 25 நிறுவனங்களுக்கு தலா ரூ.5 லட்சம் என மொத்தம் ரூ.1 கோடியே 25 லட்சம் நிதி உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

புத்தொழில் முனைவோர்களையும் அவர்களுக்கு தொழில் சார்ந்த ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் வழங்கும் தொழில் இணைக்கும், Mentor-TN என்ற வழிகாட்டி மென்பொருள் இணையதளம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது. இவைகள் மட்டுமல்ல, உள்ளூர் திறமைகளை வளர்த்தெடுக்க, 20 குறும் குழுமங்கள், 5 பெரும் குழுமங்கள், புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள், பொது உற்பத்தி நிலையங்கள், பொது வசதி கட்டிடங்கள், தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள், என எண்ணற்ற திட்டங்களை கழக அரசு வேகமாக நிறைவேற்றி வருகிறது.

இந்த, உலகத் தமிழ் வணிகர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் உலகின் பல்வேறு பகுதியிலிருந்து கலந்து கொண்டுள்ள, தொழிலதிபர்கள், தொழில்முனைவோர்கள், நம் தமிழகத்தின் உற்பத்தி பொருட்களை உலகமெங்கும் கொண்டு செல்ல வேண்டும் என கேட்டுக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் 2030-ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கினை அடைய, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.மஸ்தான், மலேசிய நாட்டின் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, இலங்கை முன்னாள் முதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒய்.வி கேசவன், வடஅமெரிக்க தமிழ் சங்க தலைவர் டாக்டர் ஜானகிராமன், விஐடி பல்கலைகழக வேந்தர் விஸ்வநாதன், உலக தமிழ் வர்த்தக சங்க தலைவர் செல்வகுமார் மற்றும் வெளிநாட்டு தூதர்கள், தமிழ் சான்றோர்கள், தொழிலதிபர்கள், தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in